24th July 1964]

**கனம் திரு. கோ. பூவராகன்:** இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

*Chinnar and Thoppaiar Scheme*

* 689 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it is a fact that the Chinnar and Thoppaiar Schemes of Dharmapuri taluk have been included in the B list of the Third Five-Year Plan; and

(b) if so, whether the schemes would be taken up for execution within the Third Five-Year Plan period itself?

THE HON. SRI V. RAMAIAH: (a) No, Sir.

(b) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** இந்தத் திட்டங்களைப் பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வட சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து ஒரு கோரிக்கை வந்ததா? அந்தக் கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? 9-30 a.m.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** மாவட்ட ரீதியில் மட்டுமல்ல. அரசாங்கமே அதைப் பரிசீலனை செய்து மத்திய அரசாங்கத்திற்கும், ப்ளானிங் கமிஷனுக்கும் சிபாரிசு செய்யும்போது காவிரியோடு திட்டம் சம்பந்தப்பட்டிருப்பதால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியாமல் போய்விட்டது. நான்காவது திட்டத்தில் சேர்க்க ஆலோசனை செய்யும்போது இந்தத் திட்டங்களை மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்யும். முடிந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே சிறு, நடுத்தரத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்த இரண்டு சிற்றாறுகளும் மேட்டூர் பகுதியிலே போய் காவிரியில் கலக்கக் கூடியவை. இவைகள் காவிரியில் கலக்கிறது என்பதற்காக இவற்றைத் தடை செய்திருக்கும்போது மைசூர் பகுதியில் காவிரியோடு சங்கமம் ஆகும் நதியின் குறுக்கே அணை கட்டலாமா? அப்படியானால் மைசூர் ராஜ்யத்தில் கட்டுவதாகச் சொல்லுகிறார்களே அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** காவிரி நதியைப் பொறுத்தவரையில் அணைகள் கட்டுவதைப் பற்றி ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி நமது ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, மைசூர் ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, அந்த ஒப்பந்தப்படி எங்கேனும் இங்கேயோ அல்லது மைசூரிலோ ஏதாவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசாங்கத்தின் மூலமாக இரண்டு அரசாங்கங்களும் எடுத்துக் கொள்ள அந்த ஒப்பந்தத்தில் இடம் இருக்கிறது.